பெறுநர். 05-08-2016

செயலாளர்,

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,

சென்னை – 600 002

ஐயா,

பொருள் தமிழ்நாடு மின்வாரியம். – அட்டைப்பட்டியல் பிரிவு – வருவாய்மேலாளர்களுக்கு 1-1-2003 முதல் தேர்வு நிலை ஊதியமாக ரூ.8100 – 275 – 15525 சம்பளம் வழங்கிடக் கோருதல்.

பார்வை 1. சென்னை தொழிலாளர் தீர்ப்பாய்வம்,(தொழில் தகராறு எண்.18/2012-ல்) வழங்கிய 23-5-2016 தேதியிட்ட தீர்ப்பு.
2. தொழிலாளர் அலுவலர் 2 – சென்னை -108 – ந.க.எண்.m/217/16 நாள் 15-6-2016.
3. எங்கள் சங்கத்தின் 30-06-2016 தேதியிட்டக் கடிதம்.

பார்வையில் காணப்படும் எங்களது கடிதத்தின் தொடர்ச்சியாக கீழ்காணும் சில விவரங்களை தங்களது பார்வைக்கும் மேலான நடவடிக்கைக்கும் கொண்டுவர விரும்புகிறோம்.

மின்சாரவாரியத்தில் கீழ்கண்ட 4 பிரிவுகளுக்கான பணிகளும் பணியாளர் எண்ணிக்கையும் வேலைபளு ஒப்பந்தத்திற்கு உட்பட்டவையாகும்.

1. வருவாய்பிரிவு 2. களப்பிரிவு 3. பண்டகசாலைப்பிரிவு 4. அட்டைப்பட்டியல் பிரிவு.

1969-ம் ஆண்டு முதல் நடைமுறையிலிருக்கும் வேலைபளு ஒப்பந்தங்கள் அவ்வப் போது திருத்தியமைக்கப்படும். இதன்படி 19-01-1994 அன்று அட்டைப்பட்டியல் பிரிவிற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒப்பந்தத்தின் ஷரத்துப்படி இதற்கு முன்பு வருவாய்ப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட 4 வருவாய்மேலாளர் பொறுப்புக்களுக்குப் பதிலாக ஒவ்வொரு பிரிவு அலுவலகத்திற்கும் ஒரு வருவாய் மேலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது,(B. P. No. 5, dt. 25-1-94) இதனால் கூடுதலாக சுமார் 1000 கணக்கீட்டு ஆய்வாளர்களுக்கு வருவாய்மேற்பார்வையாளர் பதவி உயர்வு கிடைத்தது.

--2

இவர்கள் அனைவரும் வேலைபளு பொறுப்புக்கு எதிராக பதவி உயர்வு பெற்றதால் இவர்களின் வருவாய்மேற்பார்வையாளர் பணியில் சேர்ந்த தேதி 01-01-1994 என கணக்கில் எடுத்து சலுகை வழங்கப்பட்டது. இதனால் இவர்களுக்கு 9 ஆண்டுகள் பணிமுடித்தப்பின் 01-01-2003 முதல் தேர்வுநிலை வழங்கப்பட்டது,

01-01-2003-ல் தேர்வுநிலை ஊதியம் ரூ.5850-200-11550. இது முதுநிலை வருவாய் மேலாளருக்கான ஊதியமாகும். மற்றையப் பிரிவு பணியாளர்களுக்கு தேர்வுநிலைக்கான ஊதியம் அடுத்த பதவி உயர்வு பொறுப்புக்குரிய ஊதியம் வழங்கப்பட்டதால் வருவாய் மேலாளர்களுக்கும் தேர்வுநிலைக்கான ஊதியம் அடுத்த பதவி உயர்வான கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்குரிய ஊதியம் ரூ.8100-275-15225 வழங்குவதற்கு வாரிய உத்திரவு எண்.11-நாள்.08-02-2006 வெளியிடப்பட்டது. இது 01-12-2002 முதல் அமுலுக்கு வரும் என்றும் கூறப்பட்டது,

B. P. No. 11-நாள்.08-02-2006-ல்

" *(iv)the selection grade ordered in Para (i) and (ii) above to certain categories shall be allowed only after fixation in the revised scale of pay ordered with effect from 01-12-2002 and not in the pre-revised scale of pay. Therefore persons opted to remain in the pre-revised scale of pay till their next increment/promotion /selection Grade/internal selection/date of completion of 15years of period shall be governed by the existing Selection Grade scheme only till such time."* என்று கூறப்பட்டிருப்பதை தொழிலாளர் தீர்ப்பாயம் ஏற்கவில்லை.

<u>மாறாக</u>

" The Selection Grade Revenue Supervisors who placed on selection Grade as on 01-01-2003 are eligible to receive the pay in the payband of Rs. 8100-275-15525 from 01-01-2003 onwards and not on the pre-Revised scale of Pay" என்று 23-05-2016-ல் தீர்ப்பளித்துள்ளது.

இந்நிலையில்

(1) தொழிலாளர் தீர்ப்பாயத்தின் உத்திரவுபடி 01-01-2003 முதல் தேர்வநிலை ஊதியமாக ரூ.8100-275-15225 வழங்குமாறு வேண்டுகிறோம்.
(2) இதனால் 1000 ஓய்வுபெற்ற வருவாய் மேலாளர்கள் பலன் பெறுவர்.
(3) இவர்கள் பெரும்பாலானோர் 2009-10-க்குள் ஓய்வு பெற்றுவிட்டனர். 65 வயதை தாண்டியவர்கள்.
(4) இவர்களில் ஒருசிலருக்கு ரூ.8100-275-15225-ல் தேர்வுநிலை ஊதியம் வழங்கப்பட்டது. நிலுவைத்தொகை முதலில் கொடுக்கப்பட்டு ஓய்வு பெறும்போது ஒட்டுமொத்தமாக பிடித்தம் செய்யப்பட்டது.
ஒருசிலருக்கு பழைய ரூ.5850-200-11550-ல் தான் தேர்வுநிலை ஊதியம் வழங்கப்பட்டது. நிலுவைத்தொகை எதுவும் வழங்கவும் இல்லை. பிடித்தமும் செய்யப்படவில்லை.

--3

(5) பழைய தேர்வு நிலை ஊதியம் ரூ.5850-200-11550 புதிய தேர்வு நிலை ஊதியம் 8100-275-15225 இரண்டுக்கும் சம்பளம் பொருத்தும் போது மாதம் ஒன்றுக்கு ஏற்படும் வித்தியாசம் சம்பளம் மற்றும் அகவிலைப்படி சேர்த்து சுமார் ரூ.150/- முதல் ரூ.210/- மட்டுமே. இது பணிக்காலத்தில் கிடைக்கும் பலன். ஓய்வு பெற்ற பிறகு ஓய்வூதியம் ரூ.50-ம் அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படியும் கூடுதலாகக் கிடைக்கும்.

(6) இதனால் வாரியத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவு

:- உத்தேசமாக 2010 வரை பணிக்காலப்பலன் கணக்கிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சராசரியாக மாதம் ரூ.175- வீதம் | | |
| ஆண்டுக்கு ரூ.175x12= | ரூ.2, 100- | |
| 8 ஆண்டுகளுக்கு | ரூ.16, 800- | |
| ஓய்வு பெறும்போது 11 மாத விடுப்பு ஊதியம். | | |
| 175 X 11- | ரூ.1, 925- | |
| பணிக்கொடை. 16½ மாதம் | ரூ.2, 890- | |
| பணிக்காலப் பலன் மொத்தம் | | ரூ.23, 715- |
| ஓய்வுதியப்பலன் மாதம் ஒன்றுக்கு– சுமார் | | |
| ரூ.100- வீதம் ஆண்டுக்கு 6/2016 வரை | ரூ.1, 200- | |
| 5½ ஆண்டுக்கு மொத்தம் | ரூ.6, 600- | ரூ.7, 800- |
| ஒரு நபருக்கு ஏற்படும் செலவு | | ரூ.31, 515- |
| 1000 பேருக்கு | | ரூ.3, 15, 15, 000- |

நிர்வாகம், தொழிலாளர் தீர்ப்பாய்வத்தின் உத்திரவை அமுல்படுத்துவதால் ஏற்படும் செலவு ரூ.3.15 கோடி மட்டுமே. இத்தொகை உச்சகட்டத் தொகையாகத்தான் இருக்கும். இதனால் வாரியத்திற்கு பெரிய நிதிச்சுமை ஏற்படாது. ஓய்வுதியம் பெற்றுக் கொண்டிருக்கும் முதியவர்கள் நிர்வாகத்தை வாழ்த்துவார்கள். தொழிலமைதி மேலோங்கும்.

மரியாதைக்குரிய வாரியச்செயலாளர் அவர்கள், எங்களது கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து நியாயம் வழங்கிடுமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்.